## செய்திக் குறிப்பு

தமிழ் நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து வரும் 21,600 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என சென்ற சட்ட மன்றக் கூட்டத்தொடரில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஒப்புதலுடன், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்தார்கள்.

அதனைத் தொடர்ந்து 02.07.2007 நாளன்று நடைபெற்ற தமிழ் நாடு மின்சார வாரியத்தின் பொன்விழா ஆண்டு நிகழ்ச்சியில் 21,600 ஒப்பந்தத் தொழிலாளர்கள் படிப்படியாக பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள்.

அவ்வறிப்பிற்கிணங்க 6000 ஒப்பந்தத் தொழிலாளர்கள் உடனடியாக மஸ்தூராக பணி நியமனம் செய்யப்படுவார்கள்.

6000 ஒப்பந்தத் தொழிலாளர்கள் 01.12.2007 முதல் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக ஊழியர்களாக பணியமர்த்தப்பட்டு பின் 01.12.2008 முதல் மஸ்தூராக பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள்.

6000 ஒப்பந்தத் தொழிலாளர்கள் 01.12.2008ல் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக ஊழியர்களாக பணி அமர்தத்தப்பட்டு 01.12.2009 முதல் மஸ்தூராக பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள்.

மீதமுள்ள 3600 ஒப்பந்தத் தொழிலாளர்கள் 01.12.2009ல் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக ஊழியர்களாக பணியமர்த்தப்பட்டு 01.12.2010 முதல் மஸ்தூராக பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இன்று (11.09.2007) அன்று தலைமைச் செயலகத்தில் கீழ்க்காணும் 8 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார்கள்.

1. க. முனியன்
2. து. கோவிந்தன்
3. ஜெ. சந்தானம்
4. இரா. பெரியாண்டவன்
5. தே. பிரபாகரன்
6. ப. வெங்கடேஸ்வரராவ்
7. பெ. கோபிநாதன்
8. மு. இராஜசேகரன்

P. S—p—

CHIEF PUBLIC RELATIONS OFFICER,
TAMIL NADU ELECTRICITY BOARD,
144, ANNA SALAI, CHENNAI - 600 002.